T.1144

ஶ்ரீ:

ஶ்ரீரஸ்து.

ஶ்ரீகுருப்யோ நம:

ஶ்ரீமச்சங்கரபகவத்பாதாசார்யவிரசிதம்

த்வாதஶமஞ்ஜரிகாஸ்தோத்ரம்

இத்யபரநாமகம்

# பஜகோவிந்தம்.

தச்சிஷ்யவிரசித

சதுர்தஶமஞ்ஜரிகாஸ்தோத்ரஸஹிதம்.

ப்ரஹ்மஶ்ரீ, தி|| ஶ்ரீநிவாஸஶாஸ்த்ரிணா விரசித

த்ராவிடடீகாத்வயஸஹிதம்.

தி|| லோகநாதஶாஸ்த்ரிஸூநுநா

T. S. பாலஸுப்ரஹ்மண்யஶாஸ்த்ரிணா ஸ்வகீய

ஶாஸ்த்ரஸஞ்ஜீவிநீமுத்ராக்ஷரஶாலாயாம்

முத்ரிதா ஸம்விஜயதேதராம்

வெஙவாசீ

1929

Registered Copy Right.

விலை] பஜகோவிந்தம் [அணா 3

ஸ்ரீரஸ்து

ஸ்ரீசங்கராசார்யேப்யோ நம:

ஸ்ரீசங்கரபகவத்பாதா[redacted]ய விரசித

சர்ப்படபஞ்ஜரிகாஸ்தோத்ர வ்யாரம்ப:

श्लो॥ भजगोविन्दं भजगोविन्दं
भजगोविन्दं मूढमते ।
संप्राप्ते सन्निहितेकाले
नहि नहि रक्षति डुकृञ्करणे ॥ १ ॥

ஶ்லோ॥ பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
பஜகோவிந்தம் மூடமதே ।
ஸம்ப்ராப்தே ஸந்நிஹிதேகாலே
நஹி நஹி ரக்ஷதி டுக்ருஞ்கரணே॥ க॥

பதவுரை.

மூடமதே = அஜ்ஞானத்தால் செய்யவேண்டியதை யறியாத புத்தியுடையவனே,

ஸந்நிஹிதேகாலே = அந்தியகாலமானது நெருங்கி,

ஸம்ப்ராப்தே ஸதி = வருங்காலத்தில்,

டுக்ருஞ்கரணே = (டுக்ருஞ்) என்னும் வியாகரணத்தில் சொல்லப்பட்ட வார்த்தையானது,
நஹி நஹி ரக்ஷதி = கொஞ்சமேனும் காப்பாற்றவே மாட்டாது,
(தஸ்மாத் = ஆகையால்) கோவிந்தம் = பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனையே,
பஜ = ஸேவித்துவா.

(தாத்பர்யம்) ஓ புத்தியற்றவனே! பிராணோத்க்ரமண ஸமயத்தில் (டுக்ருஞ்) என்ற வியாகரண சாஸ்திரம் உன்னைக்காப்பாற்ற மாட்டாதென்பது நிச்சயம். ஆகையால் நீ பரமாத்மாவாகிய கோவிந்தனை பஜிப்பாயாக.

मूढ जहीहि धनागमतृष्णां
कुरुसद्बुद्धिं मनसिवितृष्णाम् ।
यल्लभसे निजकर्मोपात्तं
वित्तं तेन विनोदय चित्तम् ॥ २ ॥

மூட ஜஹீஹி தநாகமத்ருஷ்ணாம்
குரு ஸத்புத்திம் மநஸி வித்ருஷ்ணாம் ।
யல்லபஸே நிஜ கர்மோபாத்தம்
வித்தம் தேந விநோதய சித்தம் ॥ 2 ॥

மூட = அறிவில்லாதவனே!
தநாகமத்ருஷ்ணாம் = தனத்தை ஸம்பாதிப்பதில் விருக்கப்பட்ட பேராசையை,
ஜஹீஹி = விட்டுவிடு,
வித்ருஷ்ணாம் - ஆசையில்நின்று விடுபட்டதான,
ஸத்புத்திம் = உத்தமமான அறிவை,
மநஸி = மனதில்,

குரு = அப்பியாசத்தால் த்ருடப்படுத்திக்கொள்,
நிஜகர்மோபாத்தம் = தன் குலாசாரத்துக்கு ஏற்பட்ட காரியங்களாலடையப்பட்ட,
யத்வித்தம் = யாதொரு பொருளை,
லபஸே = அடைகிறாயோ,
தேந = அந்தப்பொருளால்,
சித்தம் = மனதை,
விநோதய = ஸந்தோஷப் [படுத்து.

(தா-ம்.) ஓ மூடா! பணம் சம்பாதிக்கவேண்டுமென்னும் பேராசையைவிட்டு உன் மனதிலுள்ள பேராசையை ஒழித்து உத்தமமான அறிவை நிலை நிற்கச்செய். தன் குலாசாரத்திற்கு ஏற்பட்ட தொழிலால் எது கிடைக்கின்றதோ அப்பொருளால் உன்மனதைச் சந்தோஷப்படுத்திக்கொள். (௨)

नारी स्तनभर नाभीदेशं
दृष्ट्वामागा मोहावेशम् ॥
एतन्मांसवसादिविकारं
मनसिविचिन्तय वारं वारम् ॥ ३ ॥

நாரீஸ்தநபர நாபீதேஶம்
த்ருஷ்ட்வா மாகா மோஹாவேஶம் |
ஏதந்மாம்ஸ வஸாதிவிகாரம்
மநஸி விசிந்தய வாரம்வாரம் ॥ ௩॥

நாரீஸ்தநபர நாபீதேஶம் = ஸ்திரீகளுடைய குசமண்டலத்தையும், தொப்புள் பிரதேசத்தையும்,
த்ருஷ்ட்வா = பார்த்து,
மோஹாவேஶம் = காமவிகாரத்தை,
மாகா: = அடையாதே,

மாம்ஸவஸாதிவிகாரம் = மாம்ஸம் சவ்வு முதலானவைகளால் விகாரமானது
ஏதத் = இதை,
மனஸி = மனதில்,
வாரம்வாரம் = அடிக்கடி,
விசிந்தய = ஆலோசித்துப் பார்.

(தா-ம்.) ஸ்திரீகளின் ஸ்தனபாரத்தையும் நாபீபிரதேசத்தையும் பார்த்து காமவிகாரமடையாதே, இவை மாம்ஸம், கொழுப்பு இவைகளின் விகாரமென்று அடிக்கடி மனதிற் சிந்தைசெய். (௩)

नळिनी दळगत जलमतितरळं
तद्वज्जीवित मतिशयचपलम् ।
विद्धि व्याध्यभिमानग्रस्तं
लोकं शोकहतञ्च समस्तम् ॥ ४ ॥

நளிநீ தளகத ஜலமதிதரளம்
தத்வஜ்ஜீவித மதிஶய சபலம் ।
வித்தி வ்யாத்யபிமாநக்ரஸ்தம்
லோகம் ஶோகஹதஞ்ச ஸமஸ்தம் ॥ ௪॥

நளிநீதளகதஜலம் = தாமரை இலையை அடைந்த ஜலமானது,
அதிதரளம் = மிகவும்சஞ்சலமானது,
தத்வத் = அப்படியே,
ஜீவிதம் = பிராணனும்,
அதிஶயசபலம் = மிகவும் சஞ்சலமானது,
ஸமஸ்தம்லோகம் = எல்லா உலகமும்,
வ்யாத்யபிமாநக்ரஸ்தம் = வி

யாதி அகங்காரம்முதலிய வைகளால் பீடிக்கப்பட்ட தாகவும்,
ஶோகஹதம் = துக்கத்தால் பீடிக்கப்பட்டதாகவும்,
வித்தி = அறிந்துகொள்.

(தா-ம்.) தாமரையிலையை அடைந்த ஜலம்மிகசஞ்சலமானது அதுபோல பிராணனும் மிக சஞ்சலமாக யிருக்கின்றது. உலகமுழுவதும் வியாதியினாலும் அஹங்காரத்தினாலும் பீடிக்கப்பட்டதாக துக்கத்திற் குள்ளாயிருக்கின்றதென்றறிந்துகொள். (௪)

**यावद्वित्तोपार्जनसक्तः**
**तावन्निजपरिवारो रक्तः।**
**पश्चाज्जीवति जर्झरदेहे**
**वार्तां कोपि नपृच्छति गेहे॥ ५॥**

யாவத்வித்தோபார்ஜநஸக்த:
தாவந்நிஜபரிவாரோ ரக்த:।
பஶ்சாஜ்ஜீவதி ஜர்ஜரதேஹே
வார்தாம் கோபி நப்ருச்சதி கேஹே॥ ௫॥

யாவத் = எதுவரையிலும்,
வித்தோபார்ஜநஸக்த: = பொருள் சம்பாதிப்பதில் ஆசை யுள்ளவனாக இருக்கிறானே,
தாவத் = அதுவரையிலும்,
நிஜபரிவார: = தன்னைச் சேர்ந்த ஸம்ஸாரம் குழந்தை முதலான பரிஜனமானது,
ரக்த: = ஆசையுள்ளது,
பஶ்சாத் = பிறகு,
ஜர்ஜரதேஹே = வியாதி முதலானவைகளால் தளர்ந்துபோன இந்த தேகமானது,

ஜீவதி = பிராணனோடிருக்கும்போதே,
கோऽபி = ஒருவனும்,
வார்த்தாம் = க்ஷேமவார்த்தையை,
கேஹே = வீட்டில்,
ந ப்ருச்சதி = விசாரிப்பதே இல்லை.

(தா-ம்) எதுவரையில் நீ பொருள் ஸம்பாதிப்பதில் ஆசையுடன் கூடினவனாக இருக்கின்றனையோ அது வரையில் உன்னைச் சேர்ந்த பரிஜனங்கள் அன்புபாராட்டி வருவார்கள். அதன் பிறகு வியாதி முதலியவைகளால் தளர்ச்சியடைந்த உன் தேகம் உயிரோடிருந்தாலும் வீட்டிலொருவரும் உனது க்ஷேமத்தை விசாரிக்கமாட்டார்கள். (௫)

यावत्पवनो निवसति देहे
तावत्पृच्छति कुशलं गेहे ।
गतवति वायौ देहापाये
भार्या बिभ्यति तस्मिन् काये ॥ ६ ॥

யாவத்பவனோ நிவஸதி தேஹே
தாவத்ப்ருச்சதி குசலம் கேஹே।
கதவதி வாயௌ தேஹாபாயே
பார்யா பிப்யதி தஸ்மின் காயே॥ ௬॥

யாவத் = எதுவரையிலும்,
பவந: = மூச்சானது,
தேஹே = தேகத்தில்,
நிவஸதி = இருக்கிறதோ,
தாவத் = அதுவரையிலும்,
கேஹே = வீட்டில்,
குசலம் = க்ஷேமத்தை,
ப்ருச்சதி = கேட்டுக்கொண்டிருப்பார்கள்,
வாயௌ = மூச்சானது,
கதவதி = போகவே,
தேஹாபாயே = சரீரத்திற்

கபாயம் நேரிடவே,
ஸாயார்=ஸம்ஸாரங்கூட,
தஸ்மிநுகாயெ = அந்த மூச்

சில்லாததேசவிஷயத்தில்
பிஸ்யதி=பயப்படுகிறுள்

(தா-ம்) எதுவரையில் மூச்சானது உனது தேகத்தில் தங்கி இருக்கின்றதோ அதுவரையிலும் வீட்டிலுள்ளவர்கள் உனது க்ஷேமத்தைத் விசாரித்து வருவார்கள். தேகத்திற்கபாயம் ஸம்பவித்து அதனுல் பிராணன் சரீரத்தைவிட்டு நீங்கியபொழுது மனைவி முதலியவர்களுங்கூட அந்த தேகத்தைப்பார்த்து பயப்படுகிறுர்கள். (சு)

**अर्थ मनर्थं भावय नित्यं**
**नास्ति तत स्सुखलेश स्सत्यम् ।**
**पुत्रादपि धनभाजां भीतिः**
**सर्वत्रैषा विहिता रीतिः ॥ ७ ॥**

அர்த்தமநர்த்தம் பாவய நித்யம்
நாஸ்தி தத ஸ்ஸுகலேஶ ஸ்ஸத்யம் ।
புத்ராதபி தநபாஜாம் பீதிஃ
ஸர்வத்ரைஷா விஹிதா ரீதிஃ ॥ எ ॥

அர்த்தம்=பொருளை,
அநர்த்தம் = ஆபத்துகளுக்கெல்லாம் காரணமாக,
நித்யம்=எப்போதும்,
பாவய = நிச்சயமா யெண்ணிக்கொள்,
ததஃ=அப்பொருளால்,

ஸுகலேஶஃ = சுகத்திலுடைய ஏகதேசாம்சங்கூட,
நாஸ்தி = இல்லை,
ஸத்யம்=நிச்சயம்,
(கஸ்மாதிதிசேத்=அதெதப்படி யென்றல்,) [களுக்கு
தநபாஜாம் = பாக்கியவான்

புத்ராதபி = பிதவுமென் புள்ள பிள்ளைகளிடமிருந்து கூட
பீதி: = பயம், (ஜாயதே = உண்டாகிறது)
ஸர்வத்ர = எல்லாவிடங்களிலும்,
ஏஷா ரீதி: = இப்படிப் பட்டஸகல ஜனங்களாலும் அனுபவிக்கப்பட்ட இந்த மார்க்கமானது,
விஹிதா = ஏற்பட்டிருக்கின்றது.

(தா-ம்.) தனம் ஆபத்திற்குக் காரணமென்று எப்பொழுதும் நினை; அதனால் கொஞ்சங்கூட சுகமில்லை என்பது நிச்சயம். அதெப்படி என்றால், தனம் முதலிய ஸகல ஸம்பத்துக்களும் பொருந்திய பாக்கியவான்களுக்குங்கூட புத்திரமித்திர களத்திராதியர்களால் பயமுண்டாகின்றது. இப்படி ஸகல ஜனங்களாலு மனுபவிக்கப்பட்ட இந்த வழக்கமானது எங்கும் ஏற்பட்டிருக்கின்றது. (எ).

बालस्तावत् क्रीडासक्तः
तरुणस्ताव त्तरुणीसक्तः ।
वृद्धस्ताव च्चिन्तासक्तः
परेब्रह्मणि कोपि न सक्तः ॥ ८ ॥

பாலஸ்தாவத் க்ரீடாஸக்த:
தருணஸ்தாவ த்தருணீஸக்த: ।
வ்ருத்தஸ்தாவ ச்சிந்தாஸக்த:
பரேப்ரஹ்மணி கோபி நஸக்த:॥ அ॥

பாலஸ்தாவத் = பாலனாயிருக்கும்போது,
க்ரீடாஸக்த: = விளையாட்டிலாசையுள்ளவனாயும்,
தருணஸ்தாவத் = யுவாவாயிருக்கும்போது,

தருணீஸக்த: = நல்ல ஸ்திரீ விஷயத்தில் ஆசையுடைவனாயும்,
வ்ருத்தஸ்தாவத் = கிழவனா யிருக்கும்போது,
சிந்தாஸக்த: = கவலையுடையவனாயும்,
(பவதி = ஆகிறான்,)
கோபி = இம்மூன்றவஸ்தைக்குள்பட்ட எவனும்,
பரே = ஸர்வோத்தமனான,
ப்ரஹ்மணி = ஸர்வவ்யாபகரான ஸ்ரீ மந்நாராயணன் விஷயமாய்,
ஸக்த: = மனோவாக்காயங்களால் தியானபஜன நமஸ்காரம் முதலானவைகளைச்செய்யச் சக்தி யுள்ளவனாக,
ந = ஆகிறதில்லை.

(தா-ம்) (மனிதன்) பாலனாயிருக்கும்பொழுது விளையாட்டிலாசையுள்ளவனா யிருக்கின்றான், யுவாவாயிருக்கும்பொழுது யௌவன ஸ்திரீகளிடத்தில் ஆசைகொண்டவனாயிருக்கின்றான்; கிழவனாக இருக்கும்பொழுது கவலையுடையவனாக இருக்கின்றான். ஸர்வோத்தமனான பரப்ரம்மத்தினிடத்தில் ஒருவனும் ஆஸக்தி யுள்ளவனல்ல. (அ)

का ते कान्ता कस्ते पुत्रः
संसारोय मतीव विचित्रः ।
कस्यत्वंवा कुत आयातः
तत्वं चिन्तय तादिहभ्रान्तः ॥ ९ ॥

காதே காந்தா கஸ்தே புத்ர:
ஸம்ஸாரோய மதீவ விசித்ர:
கஸ்யத்வம் வா குத ஆயாத:
தத்வம் சிந்தய ததிஹ ப்ராந்த: ॥ ௯ ॥

தே = உனக்கு,
காந்தா = இச்சைக்கு விஷயமான ஸ்திரீ,
கா = யார்,
தே = உனக்கு,
புத்ர꞉ = அபிமானஸ்பதமானபிள்ளை,
க꞉ = யார்,
த்வம்வா = நீயேதானகட்டும்,
கஸ்யவா = இந்த ஜன்மத்திற்கு முன் யாருடையவன்,
குத꞉ = எங்கிருந்து,
ஆயாத꞉ = வந்தவன்,
அயம் = இப்படிப்பட்ட,
ஸம்ஸார꞉ = குயவனுடைய சக்கிரம்போல்சுற்றப்பட்ட இந்தஸம்ஸாரமானது,
அதீவ = மிகவும்,
விசித்ர꞉ = விசாரிக்கும்போது ஆச்சரியகரமாக இருக்கின்றது,
தஸ்மாத் = ஆகையால்,
இஹ = இதைவிசாரிக்கின்ற விஷயத்தில்,
த்வம் = நீ,
ப்ராத꞉ = புத்திரமித்ரகளத்திரர் முதலானவர்களை வாஸ்தவமாய் நினைத்து பிரமிக்கிறாய்,
தத்வம் விஜாநீஹி = வாஸ்தவத்தை வேதாந்த சாஸ்திரத்தாலும் ஸ்வானுபவத்தாலும்தெரிந்துகொள்.

(தா-ம்.) உன் மனைவியாவள் ? உன் மகன் யாவன் ? நீ யாவன் ? எங்கிருந்து வந்தனை ? இந்த குலால சக்கிரம் போன்ற ஸம்ஸாரம் வெகு விசித்திரமாக இருக்கின்றது. ஆகையால் நீ புத்திர மித்திர களத்திரர் முதலானவர்களை வாஸ்தவமாக நினைத்து பிராந்தி அடைந்திருக்கின்றாய் வாஸ்தவத்தைத் தெரிந்துகொள். (௯)

सत्सङ्गत्वे निस्सङ्गत्वं
निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।

निर्मोहत्वे निश्चलतत्वं
निश्चलतत्वे जीवन्मुक्तिः ॥ १० ॥

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் ।
நிர்மோஹத்வே நிஶ்சலதத்வம்
நிஶ்சலதத்வே ஜீவன்முக்தி: ॥ ௧௦ ॥

ஸத்ஸங்கத்வே=வேதாந்த ஸிரவண மநநாதிகளால் சுத்தாந்தரங்களுன பெரியோர்களுடைய ஸங்கம் ஏற்படும்பக்ஷத்தில்,

நிஸ்ஸங்கத்வம்=புத்திர மித்திர களத்திரர்களில் விசேஷ அபிமான மில்லாமலிருக்குகையானது,

(ப்ராப்யதே=அடையப்படுகிறது)

நிஸ்ஸங்கத்வே=ஜனஸங்க மில்லாமலிருக்குமானல்,

நிர்மோஹத்வம் = பொருள் முதலானதுகளில் ஆசையில்லாம லிருக்குகை யானது (ஏற்படுகிறது,)

நிர்மோஹத்வே = இஷணத்ரயங்களும் ஜயிக்கப்படுமானல்,

நிஶ்சலதத்வம் = நிர்மலஞான மானது (உண்டாகிறது,)

நிஶ்சலதத்வே=அப்படி சுத்தமான ஞான மேற்படுமானல்,

ஜீவன்முக்தி:=ஜீவன் முக்தனுக ஆகலாம்.

(தா-ம்.) ஸத்புருஷர்களுடைய ஸஹவாஸ முண்டானல் அபிமானப்பற்று நீங்கும். அபிமானப்பற்று நீங்கினல் ஆசை யொழியும். ஆசை யொழிந்தபின் நிர்மல ஞான பிராப்தி உண்டாகும். அந்த நிர்மல ஞானத்தினல் ஜீவன் முக்தனுகலாம். (௧௦)

वयसिगतेकः कामविकारः
शुष्के नीरे कः कासारः ।
क्षीणे वित्ते कः परिवारः
ज्ञाते तत्वे कस्संसारः ॥ ११ ॥

வயஸிகதே க꞉ காமவிகார꞉
ஶுஷ்கே நீரே க꞉ காஸார꞉ ।
க்ஷீணே வித்தே க꞉ பரிவார꞉
ஜ்ஞாதே தத்வே கஸ்ஸம்ஸார꞉ ॥ ௧௧ ॥

வயஸி=யௌவனமானது,
கதே=போய்விடுமானால்,
காமவிகார꞉ = மன்மதனாலுண்டாகக்கூடிய மனோவ்யாகூலமானது,
க꞉=எது,
நீரே=ஜலமானது,
ஶுஷ்கே=சுண்டிப்போனால்,
காஸார꞉=குளம்,
க꞉=எப்படிப்பட்டது;
வித்தே=பொருளானது,
க்ஷீணே=ஒழிந்து விட்டால்;
பரிவார꞉=பரிஜனமானது,
க꞉=எப்படிப்பட்டது,
தத்வே=பரமார்த்த ஞானமானது,
ஜ்ஞாதே = குருபதேசத்தாலேற்படுமானால்,
ஸம்ஸார꞉ = அஹங்காராதி பிரபஞ்சமானது,
க꞉=எப்படிப்பட்டது, அதாவது முக்தனாக ஆகிறபடியால் அகங்காரம் முதலானவைகள் தானே நசிக்குமென கருத்து,

(தா-ம்.) யௌவனம் நீங்கியபின் காமவிகாரம் எத்தன்மையது ? நீர்வற்றினகுளம் எப்படிப்பட்டதாயிருக்கும் ? செல்வம் குறைந்தபின் பரிவாரங்கள் எத்தன்மை

யாவார்? பரமார்த்த ஞானமானது உண்டானபின், சமுசாரம் எப்படிப்பட்டதாகும். (கக)

मांकुरु धनजनयौवनगर्वं
हरतिनिमेषात् कालस्सर्वम् ।
मायामयमिद मखिलं हित्वा
ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ॥ १२॥

மாகுரு தநஜநயௌவநகர்வம்
ஹரதிநிமேஷாத் காலஸ்ஸர்வம் ।
மாயாமயமித மகிலம் ஹித்வா
ப்ரஹ்மபதம் த்வம் ப்ரவிச விதித்வா ॥ கஉ ॥

தநஜநயௌவநகர்வம் = பொருள், ஜனங்கள், யௌவனம் இவைகளால் உண்டான அஹங்காரத்தை,

மாகுரு = அடையாதே (ஏனெனில்)

கால꞉ = உதயாஸ்தமனம் முதலான வியவஹாரங்களால் வியவஹரிக்கப்பட்டகாலம்,

நிமேஷாத் = நிமிஷத்தில்,

ஸர்வம் ஹரதி = எல்லாவற்றையு ம்பகரிக்கின்றது, (அதாவது எல்லாம் காலவசமாய் நசித்து விடுகிறது ஆகையால்,)

மாயாமயம் = மாயாசக்தியால் செய்யப்பட்ட,

இதமகிலம் = இதோ காணப்படுகிறபாபப்பிரபஞ்சத்தை

ஹித்வா = விட்டு,

ப்ரஹ்மபதம் = பரமார்த்த ஸ்வரூபத்தை,

விதித்வா = விசாரித்துத்தெரிந்துகொண்டு,

ப்ரவிச = ஆத்ம ஸ்வரூபத்தை அடைவாயாக.

(தா-ம்.) பொருள், ஜனம், யௌவனம் ஆகிய இவைகளினால் அஹங்காரமடையாதே காலம் எல்லாவற்றையும் நிமிஷத்தில் அபகரிக்கின்றது. மாயா சக்தியால் செய்யப்பட்ட இந்த பிரபஞ்சத்தை விட்டு விட்டு பரமாத்ம ஸ்வரூபத்தை விசாரித்து அறிந்துகொண்டு அப்பரமாத்ம ஸ்வரூபத்தை யடைவாயாக.' (கஉ)

दिनयामिन्यौ सायं प्रातः
शिशिरवसन्तौ पुनरायातः ।
कालः क्रीडति गच्छत्यायुः
तदपिनमुञ्च त्याशावायुः ॥ १३ ॥

தி³நயாமிந்யௌ ஸாயம் ப்ராதஃ
ஶிஶிரவஸந்தௌ புநராயாதஃ ।
காலஃ க்ரீட³தி க³ச்ச²த்யாயுஃ
தத³பி நமுஞ்சத்யாஶாவாயுஃ ॥ கங ॥

தி³நயாமிந்யௌ = பகல் இரவு,
ஸாயம்ப்ராதஃ = அந்திவேளை காலைவேளை,
ஶிஶிரவஸந்தௌ = சிசிரருது, வஸந்தருது, (ஆகிய இவைகள்,)
புநஃ = மறுபடியும்,
ஆயாதஃ = வந்துகொண்டிருக்கிறது,
ஏவம் = இந்தப்பிரகாரம்,
காலஃ = அடியிற் சொல்லப்பட்ட காலம் (குழந்தைகள் இராஜாமந்திரி என்று சொல்லிக்கொண்டு விளையாடுவதுபோல்,)
க்ரீட³தி = விளையாடுகிறது,
ஆயுஃ = வயது,
க³ச்ச²தி = போகிறது,
தத³பி = இவ்வாறெல்லாம் தெரிந்திருந்த போதிலும்

ஆஶாவாயு: = காற்றுப் போல் வியாபித்திருக்கும் இந்த ஆசையானது, வாயுஷம்=மனிதனை, ந முஞ்சதி=விடுகிறதில்லை.

(தா-ம்.) பகல் இரவுகளும் உதயம் அஸ்தமனங்களும் ஶிஶிர ருது வஸந்த ருதுக்களும், திரும்பித் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. காலமானது (சிறுகுழந்தைகள் ராஜா மந்திரி என்று பெயர்களை வைத்துக்கொண்டு விளையாடுகின்றதுபோல்) விளையாடுகிறது. ஆயுள் குறைந்து போகின்றது. இவைகள் தெரிந்திருந்தபோதிலும் காற்றுப் போல் எங்கும் வியாபித்திருக்கும் இந்த ஆசையானது மனிதனை விடுவதில்லை. ()

द्वादशमञ्जरिकाभिरशेषः
कथितो वैयाकरणस्यैषः ।
उपदेशोभूद्विद्या निपुणैः
श्रीमच्छङ्कर भगवच्चरणैः ॥ १४ ॥

த்வாதஶமஞ்ஜரிகாபிரஶேஷ:
கதிதோ வையாகரணஸ்யைஷ: ।
உபதேஶோபூத்வித்யாநிபுணை:
ஸ்ரீமச்சங்கர பகவச்சரணை:- கச

வித்யாநிபுணை: = ஸகல கலைகளிலும் ஸமர்த்தரான, ஸ்ரீமச்சங்கர பகவச்சரணை: = பூஜ்யர்களான சங்கராசார்யஸ்வாமிகளால், வையாகரணஸ்ய= வ்யாகரணசாஸ்திரத்தைப்படித்த ஒருவனுக்கு, த்வாதஶமஞ்ஜரிகாபி: = பூங்கொத்துப் போல் நெருங்கியதும் மகரந்தத்தை பெற்றிருக்கிறதும், மஞ்

சரிகா என்னும் விருத்தத்தோடுங் கூடியதுமானபன்னிரண்டுசுலோகங்களால்,

உபதேஶ: = அடியில்சொல்லப்பட்ட இந்த வெகு வருஷகாலம் வேதாந்தம் படித்து அனுபவத்தால் ஸாதிக்கக் கூடிய இந்த விஷயமானது,

கதித: = சொல்லப்பட்டதாக,

(ஸம்பூர்ணம்-ஆயிற்று.)

(தா-ம்.) வித்தைகளறுபத்துநான்கிலும் சமர்த்தராயும், பூஜிக்கத்தக்கவராயுமுள்ள ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் வியாகரண சாஸ்திரத்தை மாத்திரம் படித்து ஆத்மஸ்வரூபானுபவமில்லாதிருந்த ஒரு வியாகரண வித்துவானுக்கு பூங்கொத்துப்போன்ற மஞ்சரிகா விருத்தத்தோடு கூடியதான மேற்கூறிய பன்னிரண்டு ஶ்லோகங்களால் வெகுகாலம் பிரயாசைப்பட்டுக் கற்க வேண்டிய விஷயங்களை எல்லாம் தனது மகிமா விசேஷத்தால் ஸ்வல்பகாலத்திலேயே உபதேசித்தருளினார் என்ற கருத்து. ()

ஐதி ஶ்ரீ ஶங்கரவிஜய-ஶ்ரீஶங்கராசார்ய
வையாகரணஸம்வாதே-வாசோவிஷ்ரம்ஸகராஜ
கர்வாபஹர்த்ரு ஶ்ரீஶங்கராசார்ய-விரசித
த்வாதஶமஞ்ஜரிகாஸ்தோத்ரம் ஸமாப்தம்.

## ஸ்ரீமச்சங்கர பகவத்பாதாசார்ய ஶிஷ்யக்ருத சதுர்தசமஞ்ஜரிகாஸ்தோத்ர ப்ராரம்பம்.

வியாகரண ஶாஸ்திரத்தைப் படித்துவந்த ஒரு வித்துவானைப்பார்த்து ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலுள்ள ஶ்லோகங்களை ஸ்ரீ சங்கராசாரியர் உபதேசித்தார். இவ்வுபதேசத்தை யனுஸரித்து வற்புறுத்திப் புலப்படுத்துமாறு அந்த ஆசாரிய புருஷராகிய மகானுடைய சிஷ்யர்கள் சதுர்தஶ மஞ்சரிகா ஸ்தோத்திர மென்னும் இப்பதினான்கு ஶ்லோகங்களையும் மேற்படி பண்டிதனைப்பார்த்து முறையே உபதேசிக்கிறார்கள். இந்த ஶ்லோகாந்தத்திலும் "பஜகோவிந்தம்" என்னும் ஶ்லோகாரம்பத்தைச் சேர்த்து சொல்லவேண்டியது.

### पद्मपाद उवाच.

काते कान्ता धनगत चिन्ता
वातुल किं तव नास्ति नियन्ता ।
त्रिजगति सज्जनसङ्गतिरेका
भवति भवार्णव तरणे नौका ॥ १ ॥

பத்மபாத உவாச.

காதே காந்தா தநகத சிந்தா
வாதுல கிம் தவ நாஸ்தி நியந்தா ।

த்ரிஜக³தி ஸஜ்ஜநஸங்க³திரேகா
ப⁴வதி ப⁴வார்ணவதரணே நௌகா ॥ க॥

பத்மபாதர் சொல்லுகிறார்.

ப்⁴ராந்த=ஓ பிராந்தனே !
கா=எப்படிப்பட்ட,
த⁴நக³தசிந்தா=பொருளைப் பற்றிய கவலையானது,
தே=உனக்கு,
காந்தா=பிரியமான ஸ்திரீ (என்றால் விஷயாதிகளினாலும், பொருளாசையினாலும் துக்கமே நேரும்,)
தவ=உனக்கு
நியந்தா=சிக்ஷிப்பவன்,
நாஸ்தி கிம்=இல்லையா,
த்ரிஜக³தி=இம் மூன்றுலகத்திலும்,
ஏகா ஸஜ்ஜநஸங்க³தி:=ஸத்புருஷர்களுடைய ஸகவாஸம் ஒன்றே,
ப⁴வார்ணவதரணே=ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவதில்,
நௌகா=ஓடமாக,
ப⁴வதி=ஆகின்றது.

(தா-ம்) ஓ பிராந்தா ! ஐஸ்வர்யமும் ஸ்திரீயும் எத்தன்மையானது ? துக்கத்தை உண்டு பண்ணுவதன்றோ ? என் சம்சார சமுத்திரத்தை தாண்டுவதற்கு ஓடம் போன்றது மூவ்வுலகிலும் ஸத் புருஷர்களுடைய சாங்கத்தியமொன்றேயாம். (க)

## तोटकाचार्य उवाच.

जटिलोमुण्डी लुञ्छित केशः
काषायाम्बर बहुकृतवेषः ।

पश्यन्नपिच नपश्यति मूढो
ह्युदरनिमित्तो बहुकृतवेषः ॥ २ ॥

தோடகாசார்ய உவாச.

ஜடிலோ முண்டீ லுஞ்சிதகேஶ:
காஷாயாம்பர பஹுக்ருதவேஷ: ।
பஶ்யந்நபி ச ந பஶ்யதி மூடோ
ஹ்யுதரநிமித்தோ பஹுக்ருதவேஷ: ॥ ௨ ॥

தோடகாசார்யர் சொல்லுகிறார்.

காஷாயாம்பர பஹுக்ருதவேஷ:=காவித்துணியினால் பெரிதாக செய்யப்பட்டவேஷத்தையுடைய ஸந்யாஸி,
ஜடிலோபி=ஜடையைதரித்தவனுயிருந்தாலும்,
முண்ட்யபி=தலையை மொட்டையடித்தவனுயிருந்தாலும்,
லுஞ்சிதகேஶ: = கத்தரிக்கப்பட்டகுடுமியையுடையவனுக யிருந்தாலும், (அதாவது காபாலிகோ ஸாயி இவர்களுக்கு விரக்தி உண்டாகுமானல் குடுமியைக் கத்தரிப்பது வழக்கம்),
மூட:=ஸந்தேகப் பட்டவன்
பஶ்யந்நபி=ஆத்ம ஸ்வரூபானுஸந்தானம் பண்ணினபோதிலும்,
நபஶ்யதி= பிரம்மஸ்வரூபானுபவ மடைய மாட்டான்,
ஹி=இக்காரணத்தால்,
பஹுக்ருதவேஷ:=அநேகவிதமாக போடப்பட்ட

| | |
|---|---|
| அடியிற் சொன்ன வேஷமானது, | 𑌉𑌦𑌰𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌃=வயற்றிற்காக ஆகிறது. |

(தா-ம்.) காவித்துணியினால் பெருமை படுத்தப்பட்ட வேஷம் பூண்ட சந்நியாசியானவன் ஜடையைத் தரித்தவனாக விருந்தாலும், தலையை மொட்டை யடித்துக்கொண்டவனாக விருந்தாலும், கத்திரிக்கப்பட்ட குடுமியை உடையவனாக விருந்தாலும், (அதாவது. காபாலிகர் கோஸாயிகள் இவர்களுக்கு விரக்தி உண்டாகுமானால் குடுமியைக் கத்தரிப்பது வழக்கம்) சந்தேகம் நிறைந்த மனமுடையவனாய் ஆத்ம ஸ்வரூபானுசந்தானம் பண்ணினபோதிலும், பிரம்ம ஸ்வரூபானுபவம் அடையமாட்டான். ஆகையால் அநேகவிதமாகப் போடப்பட்ட அடியில் சொன்ன வேஷமானது வயிற்றின் பொருட்டாகிறது. (௨)

## हस्तामलक उवाच.

अङ्गं गलितं पलितं मुण्डं
दशनविहीनं जातं तुण्डम् ।
वृद्धो याति गृहीत्वा दण्डं
तदपिनमुञ्च त्याशापिण्डम् ॥ ३ ॥

### 𑌹𑌸𑍍𑌤𑌾𑌮𑌲𑌕 𑌉𑌵𑌾𑌚.

𑌅𑌙𑍍𑌗𑌂 𑌗𑌳𑌿𑌤𑌂 𑌪𑌳𑌿𑌤𑌂 𑌮𑍁𑌣𑍍𑌡𑌂
𑌦𑌶𑌨𑌵𑌿𑌹𑍀𑌨𑌂 𑌜𑌾𑌤𑌂 𑌤𑍁𑌣𑍍𑌡𑌮𑍍 ।

வ்ருத்தோ யாதி க்ருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்சத்யாசாபிண்டம்॥ கூ:

அஸ்தாமலகர் சொல்லுகிறார்.

(யதா=எப்பொழுது)
அங்கம்=சரீரமானது, [தாக,
கலிதம் = தளர்ந்துவிடுகிற
ஜாதம்=உண்டாகிறதோ,
முண்டம்=சிரஸானது,
பலிதம்=கிழத்தனத்தால்
வெளுத்ததோ,
துண்டம் = முகம் அதாவது
வாயானது,
தசனவிஹீனம் = பல்லில்லா
ததாக ஆயிற்றே,
(ததா=அப்போதும்,)
வ்ருத்த:=கிழவன்,
தண்டம்க்ருஹீத்வா = கழியை
ஊன்றிக்கொண்டு,
யாதி = வெகு ஆசையோடு
ஸஞ்சரிக்கின்றான்,

ததபி=அப்படிப்பட்ட கிழ
த்தனத்தை அடைந்திரு
ந்தபோதிலும்,
ஆசா = புத்திர மித்திராதி
ஆசையானது,
பிண்டம்=தேகத்தை,
நமுஞ்சதி=விடுவதில்லை,
(அதாவது ஈஷணாத்ரய
பரித்யாகமே மோக்ஷ பிரா
ப்திக்கு முக்கிய காரணம்.
குருபதேசத்தில் ஸ்ரத்தை
யன்றியில் சந்தேகாத்மாவா
யிருப்பவனுக்கு ஜடாதார
ணம் முதலான விரக்த வே
ஷத்தால் வயிற்றுப் பிழைப்
பேயொழியவேறில்லை.)

(தா-ம்.) சரீரம் திருடம் குறைந்து தளர்ந்தது; தலை நரைத்து விட்டது; பற்கள் உதிர்ந்தன; கிழவன் கழியூன்றி நடக்கிறான். இப்படிப்பட்ட கிழத்தன்மையை யடைந்திருந்த போதிலும் ஆசை மனதைவிட் டொழியவில்லை. (கூ)

## हस्तामलकः

अग्रे वह्निः पृष्ठे भानू
रात्रौ चुबुक समर्पितजानुः ।
करतलभिक्ष स्तरुतलवास
स्तदपिनमुञ्च त्याशापाशः ॥ ४ ॥

ஹஸ்தாமலக:.

அக்ரே வஹ்நி: ப்ருஷ்டே பாநு
ராத்ரௌ சுபுக ஸமர்பிதஜாநு: ।
கரதலபிக்ஷ ஸ்தருதல வாஸ
ஸ்ததபி நமுஞ்ச த்யாசாபாச:॥ ௪॥

ஹஸ்தாமலகர் சொல்லுகிறார்.

யஸ்ய=எவனுக்கு,
அக்ரே=முன்னே, [மோ,
வஹ்நி = அக்னி ஹோத்திர
ப்ருஷ்டே=பின்புறத்தில்,
பாநு:=சூரியனோ,
ய:=எவன்,
ராத்ரௌ=இராத்திரியில்,
சுபுக ஸமர்பித ஜா
நு:=முழங்காலில் வைக்
கப்பட்ட முகவாய்க்கட்
டையை உடையவனோ,
(அதாவது ஸர்வபரித்யா
கிக்கு வஸ்திரம் முதலானது
கள்கூட இல்லாதபடியால்
இவைகளால்தானே குளிரை
ப்போக்கடிக்கவேணும்)
(ய:=எவன்,)
கரதலபிக்ஷ:=கையிலேயே

பிச்சையெடுத்து புசிப்பவனோ,
யஃ = எவன்,
தருதலவாஸஃ = மரத்தடியில்வஸிப்பவனோ,
தமபி = அவனையும்,
ஆசாவாசஃ = பாசம்போலுள்ள ஆசையானது,
ந முஞ்சதி = விடுவதில்லை,
(எப்படிப் பட்டவனுக்கும் ஆசை விடாதென்பது ஹஸ்தாமலகருடைய கருத்து.)

(தா-ம்) முன் புறத்தில் நெருப்பும், பின் புறத்தில் சூரியனுமாய் முழங்காலில் முகவாய்க்கட்டையை வைத்துக்கொண்டு கைகளிற் பிக்ஷைவாங்கி மரத்தடியில் காலங்கழிப்பவனையும் ஆசை விடமாட்டாது. (௪)

## वार्तिककार उवाच.

कुरुते गङ्गासागरगमनं
व्रतपरिपालन मथवादानम् ।
ज्ञानविहीन स्सर्वमतेन
मुक्तिं नभजति जन्मशतेन ॥ ५ ॥

வார்த்திககார உவாச.

குருதே கங்காஸாகரகமநம்
வ்ரதபரிபாலந மதவாதாநம் ।
ஜ்ஞாநவிஹீந ஸ்ஸர்வமதேந
முக்திம் நபஜதி ஜந்மசதேந ॥ ௫ ॥

வார்த்திககாரர் சொல்லுகிறார்.

யஃ=எவன்,

கங்காஸாகரகமநம் = கங்கை, ஸமுத்திரம் முதலான யாத்திரைக்குப் போவுவதை

குருதே=செய்கிறானோ,

யஃ=எவன்,

வ்ரதபரிபாலநம்=நித்திய நைமித்திகம் முதலானவிருதத்தைச்செய்கிறானோ,

அதவா=அல்லது,

தாநம்=பாபத்தைப் போக்கி ஸ்வர்க்கத்தைக் கொடுக்கக்கூடியதானத்தை,

குருதே = செய்கிறானோ,

ஸஃ=அவன்,

ஜ்ஞாநவிஹீநஃ = பரமாத்ம ஜ்ஞானமன்னியில்பாமரனாக இருப்பானேயானால்,

ஸர்வமதேந= எல்லாமதத்தாலும்,

ஜந்மஶதேந= நூறுஜன்மாக்களாலும்,

முக்திம் நபஜதி = மோக்ஷத்தை அடையமாட்டான், (ஜ்ஞானத்தோடு செய்யப்பட்டகர்மாக்களுக்கு பலமேயொழிய கேவலமானகர்மாக்களுக்குப் பலமே கிடையாதென்பது வார்த்திக காரருடையமுக்கிய அபிப்ராயம்)

(தா-ம்.) எவன் கங்கை சமுத்திரம் (காசி ராமேஶ்வரம்) முதலிய தீர்த்த யாத்திரை போனாலும், நித்திய நைமித்திக விருதத்தைச் செய்தாலும், தானம் செய்தாலும்; ஞானமில்லாத பாமரன் நூறு ஜென்மமெடுத்தாலும் மோக்ஷத்தை யடையமாட்டான். (ரு)

# नित्यानन्द उवाच.

## सुरमन्दिरतरुमूलनिवासः

# शय्याभूतल मजिनं वासः ।
# सर्वपरिग्रह भोगत्यागः
# कस्यसुखं नकरोति विरागः ॥ ६ ॥

நித்யாநந்த உவாச.

ஸுரமந்திர தருமூல நிவாஸ:
ஶய்யா பூதல மஜிநம் வாஸ: |
ஸர்வபரிக்ரஹ போகத்யாக:
கஸ்யஸுகம் நகரோதி விராக:|| ௬ ||

நித்தியாநந்தர் சொல்லுகிறார்.

ஸுரமந்திர தருமூலநிவாஸ:= ஸ்வர்க்கத்திற்குச்சமானமான மரத்தடியில்வாஸமும்.
பூதலம்= பூப்பிரதேச மென்னும்,
ஶய்யா=படுக்கையும்,
அஜிநம்= மான்தோல்முதலான தோல்களால்,
வாஸ:=வஸ்திரமும்,
ஸர்வபரிக்ரஹ போகத்யாக: = ஸமஸ்தமான புத்திர மித்திர களத்திர தாஸதாஸீமுதலான தனது ஸேவக ஜனங்களாலுண்டான போகவிஷயமான ஸௌக்கியத்தினுடைய பரித்யாகமானது,
யஸ்மிந்ஸதி=யாதொரு விரக்தியேற்பட்டமாத்திரத்தில்
பவதி=உண்டாகிறதோ,
விராக: = அப்படிப்பட்ட விரக்தியானது,
கஸ்ய=எவனுக்கு, [தை,
ஸுகம் = நிரந்தரானந்தத்
நகரோதி = செய்யமாட்டாது

(ஸகல விஷயேச்சையையும் பரிகரிப்பதே நித்யாநந்த மோக்ஷமென நித்யாநந்தமின் முக்கியக்கருத்து.

(தா-ம்.) ஸ்வர்க்கத்திற்கு ஸமமாக மரத்தடியில் வாஸமும், பூமியின்மீது படுக்கையும், மான்தோல் முதலிய தோல்களால் வஸ்திரமும் கொண்டு எல்லாவித போக விஷய சௌக்கியங்களின் பரித்தியாகமானது எவனுக்கு நிரந்தராநந்தத்தைக் கொடாது. (௬)

## आनन्दगिरिस्वामिनः ऊचुः.

योगरतोवा भोगरतोवा
सङ्गरतोवा सङ्गविहीनः ।
यस्यब्रह्मणि रमते चित्तं
नन्दति नन्दति नन्दत्येव ॥ ७ ॥

𑌆𑌨𑌨𑍍𑌦𑌗𑌿𑌰𑌿 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌃 𑌊𑌚𑍁𑌃.

𑌯𑍋𑌗𑌰𑌤𑍋𑌵𑌾 𑌭𑍋𑌗𑌰𑌤𑍋𑌵𑌾
𑌸𑌂𑌗𑌰𑌤𑍋𑌵𑌾 𑌸𑌂𑌗𑌵𑌿𑌹𑍀𑌨𑌃 ।
𑌯𑌸𑍍𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌰𑌮𑌤𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑌂
𑌨𑌨𑍍𑌦𑌤𑌿 𑌨𑌨𑍍𑌦𑌤𑌿 𑌨𑌨𑍍𑌦𑌤𑍍𑌯𑍇𑌵॥ ௭॥

ஆனந்தகிரி ஸ்வாமி சொல்லுகிறார்.

யோகரதோவா = மந்திர போகம்முதலிய யோகங்களில் ஆஸக்தி யுடையவனாயிருந்தாலும்,

போகரதோ வா = விஷய சுகத்தில் ஆவலுள்ளவனாகயிருந்தாலும்,
ஸங்கரதோ வா = புத்திரமித்திராதி ஜன சமூகத்தில் அனுராகமுள்ளவனாக இருந்தாலும்,
யஸ்ய = எவனுடைய,
சித்தம் = மனது,
ப்ரஹ்மணி = அவஸ்தாத்ரய ஸாக்ஷியாய் எங்கும் பரிபூர்ணமாய வஸ்துவினிடத்தில்,
ரமதே = ஏகீபாவத்தாலானந்தமடைகின்றதோ,
(ஸ: = அப்புருஷன்)
நந்ததி நந்ததி நந்தத்யேவ = எக்காலத்திலும் ஆனந்தஸ்வரூபமாகவே இருக்கிறான். (மனோலயமே மோக்ஷமென்றும், மனோவிகாரமே பிரபஞ்சமென்றும் ஆநந்தகிரிஸ்வாமிகளுடைய முக்கிய கருத்து.)

(தா-ம்.) மந்திரயோகமுதலான யோகங்களில் ஆஸக்தியுள்ளவனைப்போல் தோன்றினாலும் விஷயங்களை யனுபவிப்பதி லாசையுள்ளவனைப்போல் தோன்றினாலும், புத்திர மித்திர களத்திராதியர்களுடன் பற்றுள்ளவனைப் போல் தோன்றினாலும் அப்படிக்கொற்ற பற்றில்லாதவனைப்போல் தோன்றினாலும் எவனதுமனம் பிரம்மாதிகளிடத்தில் ஆனந்தமடைகின்றதோ அவன் எந்த காலத்திலும் ஆநந்த ஸ்வரூபியாகவே இருக்கிறான். (எ)

## दृढभक्त उवाच.

भगवद्गीता किञ्चिदधीता
गङ्गाजललवकणिकापीता ।

सकृदपि येनमुरारिसमर्चा
क्रियते तस्ययमोऽपि न चर्चा ॥ ८ ॥

த்ருடபக்த உவாச

பகவத்கீதா கிஞ்சிததீதா
கங்காஜலலவகணிகா பீதா ।
ஸக்ருதபி யேந முராரிஸமர்சா
க்ரியதே தஸ்யயமோபி ந சர்சா ॥ அ ॥

த்ருடபக்தர் சொல்லுகிறார்.

யேந=எவனால்,
பகவத்கீதா=ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவானவர் அர்ஜுனனுக்குபதேசித்த தத்வார்த்த ப்ரதிபாதகமான பகவத்கீதை என்ற கிரந்தமானது,
கிஞ்சிதபி-கொஞ்சமேனும்
அதீதா = ஸத்குருபதேசத்தால் தெரிந்துகொள்ளப் பட்டதோ,
(யேந=எவனால்,)
கங்காஜலலவகணிகா-கங்காஜல திவலையானது,
பீதா = பானம்பண்ணப் பட்டதோ,
(யேந=எவனால்,,
முராரிஸமர்சா=ஸ்ரீமந்நாராயணனை அசஞ்சலபக்தியோடு பூஜிப்பதானது,
ஸக்ருதபி = ஒருதடவையாவது, [தோ,
க்ரியதே = செய்யப்படுகிற
தஸ்ய=அப்புருஷனுக்கு,
யமோபி=யமதர்மராஜனும்
சர்சாம்=புண்யபாப விசாரத்தை,
(நகரோதி=செய்வதில்லை,)
வேதாந்தவிசாரணை, கங்கை, காவேரி முதலான நதி

ஸ்நானம், நிச்சலபக்தியோடு பகவதாராதனை ஆகியஇவைகள் மோக்ஷத்தை யடைய முக்கிய ஸாதனங்கள்.)

(தா-ம்.) எவன் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவால் அர்ஜுந ஸ்வாமிக்கு உபதேசிக்கப்பட்ட தத்வார்த்த பிரதிபாதகமான பகவத்கீதையை கொஞ்சமேனும் ஓதுகின்றானோ, கங்காதீர்த்தத்தில் திவலையாவது பானஞ் செய்கின்றானோ, ஸ்ரீமந்நாராயணனை ஒருபொழுதாவது நன்றாய்ப்பூஜிக்கின்றானோ, அவனுடைய புண்ணியபாப விசாரத்தை யமனும் செய்யமாட்டான். (அ)

## नित्यानन्द उवाच.

पुनरपि जननं पुनरपि मरणं
पुनरपि जननी जठरे शयनम् ।
इहसंसारे बहुदुस्तारे
कृपयापारे पाहि मुरारे ॥ ९ ॥

### 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦 𑌉𑌵𑌾𑌚.

𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌜𑌨𑌨𑌂 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌮𑌰𑌣𑌂
𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌜𑌨𑌨𑍀 𑌜𑌠𑌰𑍇 𑌶𑌯𑌨𑌮𑍍 ।
𑌇𑌹𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌬𑌹𑍁𑌦𑍁𑌸𑍍𑌤𑌾𑌰𑍇
𑌕𑍃𑌪𑌯𑌾𑌪𑌾𑌰𑍇 𑌪𑌾𑌹𑌿 𑌮𑍁𑌰𑌾𑌰𑍇 ॥

நித்யாநந்தர் சொல்லுகிறார்.

பஹுதுஸ்தாரே = எவ்விதத்தாலும் தாண்டமுடியாத,
அபாரே = கரையில்லாத,
இஹஸம்ஸாரே = இந்தக்குயவனுடையசக்கிரம்போல் ஜனனமரணம் முதலானவைகளால் எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருக்கப்பட்ட இந்த ஸம்ஸாரத்தில்,
புநரபி = இறந்தபிறகு மறுபடியும்,
ஜநநம் = கர்மானுஸாரமாய் உற்பத்தியும்,
புநரபி = ஜநித்தபிறகு மறுபடியும்,
மரணம் = சாவும்,
புநரபி = மறுபடியும்,
ஜநநீஜடரே = தாயின்வயிற்றில்,
சயநம் = வஸிப்பதுமாக,
ஸம்வ்ருத்தி = ஏற்படுகிறது,
(அதஏவ = ஆகையால்,)
ஹேமுராரே = முரனென்னும் அரக்கனைக்கொன்ற ஸ்ரீமந்நாராயணா,
க்ருபயா = தயையோடு,
பாஹி = காப்பாற்றும்,
(ஸம்ஸார நிவ்ருத்திக்கும் மோக்ஷப்ராப்திக்கும் பக்திமார்க்கமேகாரணம்.)

(தா-ம்.) எவ்விதத்திலும் தாண்டமுடியாத கரையில்லாத குயவனுடைய சக்கிரம்போற் சுற்றிக்கொண்டிருக்கப்பட்ட இந்த ஸம்ஸாரத்தில் செத்தபிறகு மறுபடி ஜநநமும் ஜநித்தபிறகு மறுபடி தாய்வயிற்றில் சயனமுமாயிருக்கின்றதாகையால் ஸ்ரீமந்நாராயணா என்னைக் காத்தருளும். (௧)

## योगानन्दः

## रथ्याकर्पट विरचितकन्थाः

पुण्यापुण्य विवर्जितपन्था: ।
योगी योग विवर्जितचित्तो
रमते बालोन्मत्तवदेव ॥ १० ॥

𑌯𑍋𑌗𑌾𑌨𑌨𑍍𑌦𑌃.

𑌰𑌥𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌪𑌟 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌕𑌨𑍍𑌥𑌃
𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌪𑍁𑌣𑍍𑌯 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌪𑌨𑍍𑌥𑌃 ।
𑌯𑍋𑌗𑍀𑌯𑍋𑌗 𑌨𑌿𑌯𑍋𑌜𑌿𑌤 𑌚𑌿𑌤𑍍𑌤𑍋
𑌰𑌮𑌤𑍇𑌬𑌾𑌲𑍋𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌵𑌦𑍇𑌵॥ ௧௦॥

யோகாநந்தர் சொல்லுகிறார்.

𑌰𑌥𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌪𑌟 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌕𑌂𑌥𑌾𑌃 = இராஜவீதியில்கிடக்கின்ற கிழிசல்களால் சேர்க்கப்பட்ட வஸ்திரத்தையுடையவனையும்,
𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌪𑌂𑌥𑌾𑌃 = புண்ய்பாபமென்கிற விதிநிஷேதமார்க்கமில்லாதவனையும்,
𑌬𑌾𑌲𑍋𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌵𑌦𑍇𑌵 = சிறுவன் பித்தன் இவர்களைப் போலவும் இருக்கபபட்ட
𑌯𑍋𑌗𑍀 = யோகியானவன்,
𑌯𑍋𑌗𑌨𑌿𑌯𑍋𑌜𑌿𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 = பிரம்ம ஸ்வரூபானுஸந்தானத்தில் நன்றாய் நிலைநிறுத்தப்பட்ட சித்தவிருத்தியுடையவனாய்,
𑌰𑌮𑌤𑍇 = ஆனந்தமடைகின்றான்.

(தா-ம்.) இராஜமார்க்கத்திற் கிடக்கும் கந்தைத்துணியினுடுப்பும், புண்யபாபமென்ற விதி நிஷேதமில்லாத மார்க்கத்தை யுடையவனும், சிறுவன் போலும் பித்தன்

போது மிருக்கப்பட்ட யோகியானவன் பிரம்ம ஸ்வரூபானு சந்தானத்தில் நன்றாய் நிலைநிறுத்தப்பட்ட சித்தவிருத்தியுடையவனாய் ஆனந்த மடைகின்றான். (௧௦)

## सुरेन्द्रः.

कस्त्वं कोहं कुत आयातः
कामे जननी कोमे तातः ।
इति परिभावित निजसंसारः
सर्वं त्यक्त्वा स्वप्नविचारः ॥ ११ ॥

### ஸுரேந்த்ர:.

கஸ்த்வம் கோஹம் குத ஆயாத:
காமே ஜநநீ கோமே தாத: |
இதிபரிபாவித நிஜஸம்ஸார:
ஸர்வம் த்யக்த்வா ஸ்வப்நவிசார:|| ௧௧||

ஸுரேந்தரர் சொல்லுகிறார்.

த்வம்=என்னைக்காட்டிலும் வேறான நீ,
க:=யார்,
அஹம்=உன்னைக்காட்டிலும் வேறான நான்,
க:=யார்,
குத:=எங்கிருந்து,
ஆயாத:=வந்தோம்,
மே ஜநநீ = என்னைபெற்ற தாய்,
கா=யார்,
மே=எனக்கு,
தாத:=தகப்பன்,
க:=யார்,
இதி=என்று,

பரிஹ்ருதாத்மஜஸம்ஸார: = நன்றாய் ஆலோசித்து நிச்சயித்த தன்னுடைய புத்திர மித்திர களத்திராதி வர்க்கத்தை யுடையவனும்,

ஸர்வம் = அடியிற்சொன்ன எல்லாவற்றையும்,

த்யக்த்வா = விட்டு,

யதி ஸ்திதஸ் = இருந்தால்,

ஸ்வப்நவிசார: = கனவில்கண்ட பதார்த்தங்களில் ஏற்பட்ட மித்யா ஜ்ஞானம் போன்ற நிச்சய ஜ்ஞானமானது,

ஜாயதே = உண்டாகின்றது.

(தா-ம்) நீயார்? நான்யார் எங்கிருந்து வந்தோம்? என்னைப் பெற்ற தாய் யார்? என் தகப்பன் யார்? இவைகளைத் தீரவிசாரித்து ஸம்ஸாரத்தின் நிஜஸ்திதியையுணர்ந்து எல்லாவற்றையும் விட்டொழித்திருக்குங்கால் இவை கனவிற்காணப்படுவனபோற் பொய்யென்றேற்படும். (கக)

## मेधातिथि रुवाच.

त्वयि मयि सर्वत्रैकोविष्णुः
व्यर्थं कुप्यसि मय्यसहिष्णुः ।
भवसमचित्त स्सर्वत्रत्वं
वांछस्यचिराद्यदि विष्णुत्वम् ॥ १२ ॥

மேதாதிதி ருவாச.

த்வயி மயி ஸர்வத்ரைகோவிஷ்ணு:
வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: ।

ப⁴வ ஸமசித்த: ஸர்வத்ர த்வம்
வாஞ்ச²ஸ்யசிராத்³யதி³ விஷ்ணுத்வம் ‖ ௧௨ ‖

மேதாதிதி சொல்லுகிறார்

த்வயி = எதிரில் நிற்கின்ற உன்னிடத்திலும்,
மயி = சொல்லப்பட்ட என்னிடத்திலும்,
ஸர்வத்ர = எங்கும்,
விஷ்ணு: = வ்யாபகனான பரமாத்மா,
ஏக: = ஒருவனே,
மயி = உன்னைக் காட்டிலும் வேறு என்று நினைத்த என்னிடத்தில்,
வ்யர்த²ம் = பிரயோஜனமன்னியில்
குப்யஸி = கோபமடைகிறாய்,
அசிராத் = சீக்கிரமாய்,
விஷ்ணுத்வம் = ஸர்வவ்யாபகனான பரமாத்வஸ்வரூபமடைய
வாஞ்ச²ஸி யதி³ = கோருவாயானால்,
ஸர்வத்ர = ஸர்வப் பிராணிகளிடத்திலும்,
ஸமசித்த: = ஸமமான புத்தியுடையவனாக,
ப⁴வ = ஆவாய்.

(ஸமோஹம் ஸர்வபூ⁴தேஷு என்று பகவத்வாக்யத்தில் செல்லப்பட்ட ஸாவபுதத்திலும் தான் என்ற புத்தியை யடைந்து பிரம்ம விசாரம் பண்ணுவது மோக்ஷ சாதனம்.

(தா-ம்.) உன்னிடத்திலும் என்னிடத்திலும் யெங்கும பரமாத்மா ஒருவரே வியாபித்திருக்க, பிரயோஜனமன்றியில் நீ என்னிடத்தில் கோபமடைகிறாய். சீக்கிரத்தில் பரமாத்ம ஸ்வரூபத்தையடைய விரும்புவாயாகில்

ஸகல ஜீவராசிக ளிடத்திலும் ஸமசித்தனாக விருக்க வேண்டும். (௧௨)

## भारतीवंश उवाच

कामक्रोधं लोभं मोहं
त्यक्त्वात्मानं पश्यविमोहम् ।
आत्मज्ञानविहीनामूढाः
तेपच्यन्ते नरकनिगूढाः ॥ १३ ॥

பாரதீவம்ஶ உவாச.

காமக்ரோதம் லோபம் மோஹம்
த்யக்த்வாத்மாநம் பஶ்யவிமோஹம் ।
ஆத்மஜ்ஞாநவிஹீநாமூடா:
தேபச்யந்தே நரகநிகூடா:॥ ௧௩॥

பாரதீவம்ஶர் சொல்லுகிறார்.

காமம் = எப்பொழுதும் விரும்பிக்கொண்டிருப்பதான மனோதர்மத்தையும்,
க்ரோதம் = த்வேஷிக்கப்பட்டதான மனோதர்மத்தையும்
லோபம் = பேராசையினால் சிலவுசெய்யாம லிருப்பதையும் மனோ மர்மத்தையும்,
மோஹம் = அஜ்ஞானத்தையும்,
த்யக்த்வா = விட்டு,
விமோஹம் - அஜ்ஞாநமில்லாத
ஆத்மாநம் = பரமாத்மாவை,
பஶ்ய = பாரும்,

தத்வஜ்ஞாநவிஹீநா: = தத்வஜ்ஞானமில்லாதவர்கள், (தே = எவர்களோ.) மூடா: = அம்மூடர்கள், நரகநிமக்நா: = நரகத்தில் தள்ளப்பட்டு, பச்யந்தே = (யம பூதர்களால்) உபத்திரவிக்கப்படுகிறார்கள்.

(தா-ம்.) காமம், குரோதம், லோபம், மோஹம் ஆகிய இவைகளைவிட்டு அஜ்ஞான ரஹிதரான பரமாத்மாவைப் பாரும். தத்வஜ்ஞானமில்லாத மூடர்கள் நரகத்தில் தள்ளப்பட்டு உபத்திரவப்படுகிறார்கள். (கங)

## सुमति रुवाच.

गेयं गीता नामसहस्रं
ध्येयं श्रीपति रूपमजस्रम् ।
नेयं सज्जनसङ्गमनिशं
देयं दीनजनायचवित्तम् ॥ १४ ॥

ஸுமதி ருவாச.

கேயம் கீதா நாமஸஹஸ்ரம்
த்யேயம் ஶ்ரீபதி ரூபமஜஸ்ரம் ।
நேயம் ஸஜ்ஜந ஸங்கமநிஶம்
தேயம் தீநஜநாய ச வித்தம் ॥ கச

ஸுமதி சொல்லுகிறார்.

கீதாநாமஸஹஸ்ரம் = பகவத்கீதை, பரமசிவனால் பார்வதிக்குபதேசிக்கப்பட்ட ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் இவை,
கேயம் = ஸத்குரு மூலமாய் நன்றாக அறிந்து பாராயணம் செய்யவேணும்,
ஸ்ரீபதிரூபம் = லக்ஷ்மிகாந்தனை ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்ய ஸ்வரூபத்தை,
த்யேயம் = ஆசாரியோபதேசத்தை யனுஸரித்து மனதில் த்யானிக்கவும்,
ஸஜ்ஜநஸங்கே = ஸத்புருஷர்களுடைய ஸஹவாஸம்,
சித்தம் = எப்பொழுதும்,
நேயம் = அடையத்தக்கது,
தீநஜநாய = ஏழைஜனங்களுக்கு,
வித்தம் = பொருளை,
தேயம் = கொடுக்கவேணும்.

(தா-ம்.) பகவத்கீதை ஸ்ரீவிஷ்ணு திவ்ய ஸஹஸ்ரநாமம் இவைகள் சத்குரு மூலமாக உபதேசம்பெற்று பாராயணம் செய்யத்தக்கன. லக்ஷ்மீகாந்தனை ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்ய ஸ்வரூபம் மனதில் எக்காலத்திலும் தியானிக்கத்தக்கது. ஸத்புருஷர்களுடைய சகவாசம் எப்போதும் செய்யத்தக்கது. ஏழைகளுக்கு பொருளுதவி செய்யத்தக்கது. (௧௪)

मूढः कश्चन वैयाकरणो
डुकृञ्करणाध्ययनधुरीणः ।

## श्रीमच्छङ्करभगवच्छिष्यैः बोधित आसीच्छोधितकरणः ॥१५॥

𑌉𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 𑌕𑌶𑍍𑌚𑌨 𑌵𑍈𑌯𑌾𑌕𑌰𑌣𑍋
𑌡𑍁𑌕𑍃𑌞𑍍𑌕𑌰𑌣𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌧𑍁𑌰𑍀𑌣𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑍈𑌃
𑌬𑍋𑌧𑌿𑌤 𑌆𑌸𑍀𑌚𑍍𑌛𑍋𑌧𑌿𑌤𑌕𑌰𑌣𑌃॥ ௧௫॥

𑌉𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 = வேதாந்த சிரவணமில்லாமற் போனபடியால் ஆத்மஸ்வரூபானு ஸந்தானமில்லாதவனாயும்,

𑌡𑍁𑌕𑍃𑌞𑍍𑌕𑌰𑌣𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌧𑍁𑌰𑍀𑌣𑌃 = டுக்ருங்கரணம் முதலான வ்யாகரணசாஸ்திரத்தி லிருக்கப்பட்ட ஸூத்திரங்களைப் படிப்பதில்மிகவும்ஸமர்த்தனை,

𑌕𑌶𑍍𑌚𑌨 𑌵𑍈𑌯𑌾𑌕𑌰𑌣𑌃 = வியாகரணசாஸ்திரத்தை மாத்திரம்படித்த ஒருவித்வான்,

𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑍈𑌃 = மிகவும் பூஜ்யாளான ஸ்ரீசங்கராசாரியருடைய பதினான்கு சிஷ்யர்களாலும்,

𑌬𑍋𑌧𑌿𑌤𑌃 = உபதேச மூலமாய் பரமார்த்தத்தை போதிக்கப்பட்டு,

𑌶𑍋𑌧𑌿𑌤𑌕𑌰𑌣𑌃 = ஸ்வரூபானு ஸந்தானத்தால் சுத்தாந்தக் கரணனாக,

𑌆𑌸𑍀𑌤𑍍 = ஆனான்.

(தா-ம்.) இந்தப்பிரகாரம் "டுக்ருங்" என்னும் வியாகரண ஸூத்திரத்தை பெரிதும் படித்த ஆத்மஜ்ஞானமில்லாத ஒரு வித்துவான் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதரது

சிஷ்யர்களால் பரமார்த்தோபதேசம் செய்யப்பெற்று
சுந்தரந்த்ரகாரணைக ஆனான். (௧௫)

இவ்வாறு ஸ்ரீ சங்கரவிஜயத்தில் ஸ்ரீமத் சங்கர வையா
கரண ஸம்வாதத்தில் ஆசார்யர் கட்டளையின்படி
சிஷ்யர்களால் உபந்யஸிக்கப்பட்ட சதுர்த்
தச மஞ்சரிகா ஸ்தோத்திரம்
ஸம்பூர்ணம்.

# விளம்பரம்.

இம்முத்ராக்ஷர சாலையில் இப்புஸ்தகமும் இன்னும் இதர கிரந்த நாகர புஸ்தகங்களும் விற்பனைக்குச் சித்தமாயிருப்பதால் வேண்டியவர்கள் இதனடியிற் கண்டிருக்கும் விலாசத்திற்கெழுதி வி. பீ. மூலமாக வரவழைத்துக் கொள்ளலாம்.

இதன் விலை 0-3-0

இப்படிக்கு.

தி. சுவாமிநாத சாஸ்திரி அண்டு ஸன்ஸ்,

சாஸ்த்ரஸஞ்சீவினீ பிரஸ்,

நெ 259 - தங்கசாலைத்தெரு சென்னை.

ஸ்ரீமத்ச்சங்கரபகவத் பாதாசாரிய ஸ்வாமிகள்.